# கீழக்கரை நகர்மன்ற 29.05.2020–ம் தேதிய கூட்டத்தின் நடவடிக்கைகள்

**பொருள்: 1**

கீழக்கரை நகராட்சி அலுவலக பொதுப்பிரிவில் உள்ள கணிணி மற்றும் பிரிண்டர் பழுதான நிலையில் உள்ளதால் அன்றாடப் பணிகளில் பாதிப்பு ஏற்படும் நிலை உள்ளது. எனவே அவசர அவசியம் காரணமாகவும் நிர்வாக நலன் கருதியும் கணிணி மற்றும் பிரிண்டர் பழுது பார்த்த வகையில் கீழ்க்கண்டவாறு ஸ்மாக் டெக் கம்ப்யூட்டர்ஸ் நிறுவனத்திடமிருந்து விலைப்பட்டியல் வரப் பெற்றுள்ளது.

| வ.எண் | விபரம் | பட்டியல் எண் | பட்டியல் தொகை (ரூ) |
|---|---|---|---|
| 1. | Desktop core 13-8 GB ATX Cabinet | 2135 | 25500/- |
| 2. | LG DVD Writer internal | 2135 | 1150/- |
| 3. | K7 Antivirus – Total Security | 2135 | 1500/- |
| 4. | Vanavil Tamil Software | 2137 | 24000/- |
| 5. | Printer Service | 2137 | 5000/- |
| 6. | Epson Color ink set | 2140 | 1750/- |
| 7. | Compartable Cartridge -337 | 2140 | 1100/- |
| | | **மொத்தம்** | **60,000/-** |
| | | **சரக்கு மற்றும் சேவை வரிகள்** | **10287/-** |
| | | **மொத்தம்** | **70287/-** |

மேற்காணும் பட்டியல் தொகை ரூ.70287/– (சரக்கு மற்றும் சேவை வரிகள் உட்பட) ஸ்மாக் டெக் கம்ப்யூட்டர்ஸ், இராமநாதபுரம் நிறுவனத்திற்கு பட்டியல் தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறுது.

**(கோப்பு எண்: 510/சி2/2017)**

அலுவலக குறிப்பு

1) அவசர அவசியத்தின் காரணமாகவும், நிர்வாக நலன் கருதியும் கணிணி மற்றும் பிரிண்டர் பழுது பார்க்கப்பட்ட செலவீனங்களை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2) நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மானம் எண்.732 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்: 2**

கீழக்கரை நகராட்சி அம்மா உணவகத்தில் பழுதடைந்துள்ள மேற்கூரையை சரி செய்தல் மற்றும் வெளிப்புறத்தில் பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்தும் பணி செய்வதற்கு மதிப்பீடு ரூ.2,95,000/– யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 13.05.2020–ந் தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பழுதடைந்துள்ள மேற்கூரையை சரி செய்தல் மற்றும் வெளிப்புறத்தில் பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்தும் பணிக்கு 28.05.2020–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | வருவாய் நிதி 2020–2021 | | |
| 1. | கீழக்கரை நகராட்சி அம்மா உணவகத்தில் பழுதடைந்துள்ள மேற்கூரையை சரி செய்தல் மற்றும் வெளிப்புறத்தில் பாதுகாப்பு வசதிகள் ஏற்படுத்தும் பணி | 2.95 | திரு.பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர், முனியசாமிபுரம், கீழக்கரை. | ரூ. 2,87,142/– 0.45% மதிப்பீட்டு தொகையைவிட குறைவு |
| | | | திரு. சி. பழனி ஒப்பந்ததாரர், முனியசாமிபுரம், கீழக்கரை. | ரூ.2,91,280/– 0.99% மதிப்பீட்டு தொகையைவிட அதிகம் |

**(கோப்பு எண். 234/2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மதிப்பீட்டு தொகையை விட 0.45% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.பி. சிவக்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.733 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்: 3**

கீழக்கரை நகராட்சி வார்டு எண். 5, வார்டு எண்.14, வார்டு எண். 15, வார்டு எண். 16 மற்றும் வார்டு எண். 19 ஆகிய பகுதிகளில் PVC கழிவுநீர் குழாய்கள் அமைத்து, புதிதாக Man hole மற்றும் மூடிகள் அமைக்கும் பணி ரூ.4,00,000/– மதிப்பீட்டில் செய்வதற்கும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 13.05.2020–ம் தேதி இந்நகர்மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்காணும் பணிக்கு 28.05.2020–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுக்கு இந்நகராட்சி பொறியாளர்களால் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | வருவாய் நிதி 2020–2021 | | |
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 5, வார்டு எண்.14, வார்டு எண். 15, வார்டு எண். 16 மற்றும் வார்டு எண். 19 ஆகிய பகுதிகளில் PVC கழிவுநீர் குழாய்கள் அமைத்து, புதிதாக Man hole மற்றும் மூடிகள் அமைக்கும் பணி | 4.00 | திரு.பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர், முனியசாமிபுரம், கீழக்கரை. | ரூ. 3,72,140/– 0.50% மதிப்பீட்டு தொகையைவிட குறைவு |
| | | | திரு. சி. பழனி ஒப்பந்ததாரர், முனியசாமிபுரம், கீழக்கரை. | ரூ.3,78,819/– 1.26% மதிப்பீட்டு தொகையைவிட அதிகம் |

**(கோப்பு எண். 235/2020/இ1)**

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு தொகையை விட 0.50% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.பி. சிவக்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.734 அனுமதிக்கப்பட்டது.**

பொருள்: 4

கீழக்கரை நகராட்சி வார்டு எண்.3 மீனவர் குப்பம் பொது கழிப்பிடத்தில் அமைக்கப் பட்டுள்ள திறந்தவெளி கிணற்றை பழுது நீக்கம் செய்தல் மற்றும் அங்கு நடைபாதை அமைத்தல் பணி செய்வதற்கு மதிப்பீடு ரூ.3,50,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 13.05.2020—ந் தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் திறந்தவெளி கிணற்றை பழுது நீக்கம் செய்தல் மற்றும் அங்கு நடைபாதை அமைத்தல் பணிக்கு 28.05.2020—ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| | | வருவாய் நிதி 2019—20 | | |
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.3 மீனவர் குப்பம் பொது கழிப்பிடத்தில் அமைக்கப் பட்டுள்ள திறந்தவெளி கிணற்றை பழுது நீக்கம் செய்தல் மற்றும் அங்கு நடைபாதை அமைத்தல் பணி | 3.50 | திரு.பி.எம். கஜேந்திரன் ஒப்பந்ததாரர், முனியசாமிபுரம், கீழக்கரை. | ரூ. 3,46,395/— 0.76% மதிப்பீட்டு தொகையைவிட குறைவு |
| | | | திரு. சி. பழனி ஒப்பந்ததாரர், முனியசாமிபுரம், கீழக்கரை. | ரூ.3,54,276/— 1.50% மதிப்பீட்டு தொகையைவிட அதிகம் |

(கோப்பு எண். 236/2020/இ1)

அலுவலகக் குறிப்பு:

மதிப்பீட்டு தொகையை விட 0.76% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.பி. எம். கஜேந்திரன் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்.735 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்: 5**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட தட்டான் தோப்பு பகுதியில் அமைந்துள்ள கழிவுநீரேற்ற நிலையத்திலிருந்து வடக்குத் தெரு பள்ளிவாசல் வரை 150 mm D.I K7 குழாய்கள் அமைக்கும் பணி செய்வதற்கு மதிப்பீடு ரூ.8,00,000/–யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு 13.05.2020–ந் தேதி இந்நகர் மன்றத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 150 mm D.I K7 குழாய்கள் அமைக்கும் பணிக்கு 28.05.2020–ந் தேதி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு அன்று வரப்பெற்ற கீழ்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளை மன்றம் பார்வையிட்டு ஒப்புக்கொள்ளவேண்டிய விஷயம்.

| வ. எண் | திட்டம்/ வேலையின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) | ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரரின் பெயர் | சதவீதம் |
|---|---|---|---|---|
| **வருவாய் நிதி 2019–20** | | | | |
| 1. | கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட தட்டான் தோப்பு பகுதியில் அமைந்துள்ள கழிவுநீரேற்ற நிலையத்திலிருந்து வடக்குத் தெரு பள்ளிவாசல் வரை 150 mm D.I K7 குழாய்கள் அமைக்கும் பணி | 8.00 | திரு. சி. பழனி ஒப்பந்ததாரர், முனியசாமிபுரம், கீழக்கரை. | ரூ.7,86,787/– 0.79% மதிப்பீட்டு தொகையைவிட குறைவு |
| | | | திரு.பி. சிவக்குமார் ஒப்பந்ததாரர், முனியசாமிபுரம், கீழக்கரை. | ரூ.8,04,792/– 1.48% மதிப்பீட்டு தொகையைவிட அதிகம் |

**(கோப்பு எண். 237/2020/இ1)**

**அலுவலகக் குறிப்பு:**

மதிப்பீட்டு தொகையை விட 0.79% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர் திரு.சி. பழனி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

## தீர்மானம் எண்.736 அனுமதிக்கப்பட்டது.

**பொருள்: 6**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பொதுமக்கள் தினசரி பயன்படுத்தும் வீட்டு கழிவு நீர் அனைத்தும் தட்டான் தோப்பு பகுதியில் சேகரிக்கப்பட்டு அங்கிருந்து மின் மோட்டார் மூலம் PVC குழாய்கள் பயன்படுத்தி கழிவு நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. தற்பொழுது அமைக்கப்பட்டுள்ள PVC குழாய்கள் ஆங்காங்கே உடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் சாலையில் செல்வதுடன் துர்நாற்றம் வீசுவதால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டு, பொதுமக்களிடமிருந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. எனவே, வடக்குத் தெரு பள்ளிவாசல் முதல் யூசுப் சுலைஹா மருத்துவமனை வரை உள்ள PVC குழாய்களுக்கு பதிலாக 150 mm D.I K7 குழாய்கள் அமைக்க ரூ.3,70,000/–க்கு பொறியாளர்களால் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்கள் நலன் கருதியும், பொதுசுகாதாரத்தை உறுதிப் படுத்தும் வகையில் இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும், இந்நகராட்சி பொறியாளர்களால் அனுமதி கோரப்பட்டுள்ளது மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

(கோப்பு எண்.241/2020/இ1)

<u>அலுவலக குறிப்பு</u>

1. பொதுசுகாதார நலனைக் கருத்தில் கொண்டு ரூ.3,70,000/–க்கு பொறியாளர்களால் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. இந்நகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.737 அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள்: 7</u>

இந்நகராட்சியின் 2019–2020 ஆம் ஆண்டுக்குரிய இயல்நிலை கணக்குகள் வரவு செலவினங்கள் (Receipt & Expenditure) ஐந்தொகை கணக்குகள் (Trail Balance), இருப்பு நிலை விபரம் (Balance Sheet) ஆகியவைகள் புதிய ஏழு இலக்க முறையில் (CWBS) தயார் செய்து தணிக்கைக்கு அளிக்கும் பொருட்டு நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் ABA அமைப்புக்கான ஆலோசகர் (Consultant for Municipal & Town Panchayat ABA System), திரு.வி.சீனிவாசன் எம்.காம். சி.ஏ, கோவில்பட்டி என்பவருக்கு கட்டணம் ரூ. 35,000/– மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண்.216/2020/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

நிர்வாக நலனை கருத்தில் கொண்டு ரூ.35,000/– இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.738 அனுமதிக்கப்பட்டது.</u>**

## பொருள்: 8

அரசாணை (நிலை) எண்.79, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மா.ந.2) துறை, நாள்.31.05.2013 மற்றும் அரசாணை (நிலை) எண்.118, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மா.ந.2) துறை, நாள்.26.09.2014–ல் தெரிவித்துள்ளதன்படி, இந்நகராட்சி அம்மா உணவகஙகளுக்குத் தேவைப்படும் காய்கறி வகைகளை அன்றாடம் வெளிச்சந்தை விலையில் மூன்று மாதஙகளுக்கு மட்டும் விநியோகம் செய்வதற்கு இவ்வலுவலக அறிவிப்பு ந.க.எண். 187/ இ1/2020 நாள்.21.05.2020-ன்படி விலைப்புள்ளி கோரப்பட்டதில் 29.05.2020–ந் தேதி கீழ்காணும் விவரப்படி ஆறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அதன்படி ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு இந்நகராட்சி பொறுப்பு அலுவலரால் (Nodal Officer) பரிந்துரை செய்யப்பட்டுள்ளது மன்றத்தின் பரிசீலனைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பொருட்கள் விபரம் | விலை விகிதம் | கே.செல்வ கணேச பிரபு | எம்.எஸ். ஜகுபர் சாதிக் | என்.அருண்ரா ஜ | எம்.முகம்மது ஹனிபா | எஸ்.சேனா காய்கறி | வசந்த பூபதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | வெள்ளைப் பூசணிக்காய் / முள்ளாங்கி | (கிலோ ஒன்றுக்கு) | 29 | 25 | 40 | 25 | 27 | 30 |
| 2 | சின்னவெங்காயம் | (கிலோ ஒன்றுக்கு) | 48 | 40 | 60 | 45 | 45 | 50 |
| 3 | பெரிய வெங்காயம் | (கிலோ ஒன்றுக்கு) | 24 | 20 | 30 | 18 | 15 | 25 |
| 4 | தக்காளி | (கிலோ ஒன்றுக்கு) | 19 | 15 | 20 | 15 | 15 | 20 |
| 5 | கேரட் | (கிலோ ஒன்றுக்கு) | 33 | 23 | 60 | 40 | 40 | 34 |
| 6 | கத்திரிக்காய் | (கிலோ ஒன்றுக்கு) | 30 | 23 | 58 | 30 | 30 | 30 |
| 7 | உருளை கிழஙகு | (கிலோ ஒன்றுக்கு) | 31 | 28 | 48 | 30 | 30 | 32 |
| 8 | பின்ஸ் | (கிலோ ஒன்றுக்கு) | 42 | 39 | 81 | 70 | 70 | 45 |
| 9 | கருவேப்பிலை,மல்லி | (கிலோ ஒன்றுக்கு) | 56 | 50 | 100 | 60 | 60 | 58 |
| 10 | பச்சைமிளகாய் | (கிலோ ஒன்றுக்கு) | 49 | 40 | 42 | 30 | 30 | 50 |
| 11 | இஞ்சி | (கிலோ ஒன்றுக்கு) | 68 | 60 | 110 | 70 | 70 | 70 |
| 12 | மாஙகாய் | (கிலோ ஒன்றுக்கு) | 45 | 30 | 40 | 30 | 30 | 50 |
| 13 | சௌ சௌ | (கிலோ ஒன்றுக்கு) | 33 | 24 | 37 | 30 | 30 | 35 |
| 14 | அவரைக்காய் | (கிலோ ஒன்றுக்கு) | 43 | 39 | 82 | 60 | 60 | 45 |
| 15 | காலி பிளவர் | (கிலோ ஒன்றுக்கு) | 28 | 25 | 40 | 50 | 50 | 30 |
| 16 | வெண்டைக்காய் | (கிலோ ஒன்றுக்கு) | 30 | 29 | 46 | 30 | 30 | 32 |
| 17 | முருஙகைக்காய் | (கிலோ ஒன்றுக்கு) | 39 | 40 | 42 | 50 | 50 | 40 |
| 18 | எலுமிச்சை பழம் | (கிலோ ஒன்றுக்கு) | 70 | 65 | 120 | 100 | 100 | 75 |
| 19 | ரம்ப இலை | (கிலோ ஒன்றுக்கு) | 100 | (1Pice Rs.1.00) | 20 | 40 | 40 | (1Number Rs.1.00) |
| மொத்தம் | | | 817 | 616 | 1076 | 823 | 822 | 752 |

(கோப்பு எண். 187 /2020/இ1)

அலுவலக குறிப்பு

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வ.எண்.1 முதல் 19 வரையிலான ஒட்டு மொத்த இனங்களுக்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள எஸ்.எம்.ஜகுபர் சாதிக், எஸ்.எம். காய்கறி கமிஷன் கடை, கீழக்கரை விலைப் புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி அம்மா உணவகத்திற்குத் தேவையான காய்கறி வகைகளை 01.06.2020 முதல் 31.08.2020 வரை மூன்று மாதங்களுக்கு மேற்கண்ட விலை விகிதத்தில் விநியோகம் செய்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
3. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்களை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.739 அனுமதிக்கப்பட்டது.**

பொருள்: 9

கீழக்கரை நகராட்சி ஆணையாளர் அவர்களின் அலுவலக பயன்பாட்டில் இயங்கி வந்த Mahindra Bolero LX 2WD 7STR TN-65 E-8373, நிர்ணயிக்கப்பட்ட உபயோக 10 ஆண்டுகளில் 13 ஆண்டுகள் முடிந்து விட்ட நிலையிலும், நிர்ணயிக்கப்பட்ட உபயோக கி.மீ. 2,50,000 முடிவுற்றதாலும், தற்போதுவரை சுமார் 2,73,430 கி.மீ தொடர்ந்து ஓடியுள்ளதாலும், ஈப்பு வாகனத்தின் செயல்திறன் குறைந்து அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதன் மூலம், எரிபொருள் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் அதிகம் ஏற்படுவதாலும், ஈப்பு வாகனம் எண். TN-65 E-8373- கழிவு செய்ய தூரம் காலம் கடந்துள்ளதால், தொழில் நுட்ப வல்லுநர் குழுவின் ஆய்வு செய்யப்பட்டு வாகனத்தை முதிர்ந்த நிலையில் கழிவு செய்ய உத்திரவு பிறப்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து பழைய ஈப்பு வாகனம் எண். TN-65 E-8373-ஐ முதிர்ந்த நிலையில் கழிவு செய்து இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு புதிதாக ஈப்பு வாகனம் Mahindra BOLERO ZLX Power + BSIV AC PS 7STR ABS AB வாங்குவதற்கு இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.950/2017/இ1, நாள். 15.10.2019ன்படி அனுமதி கோரப்பட்டதற்கு, மதுரை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களால் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு பரிந்துரைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதத்தில், அரசாணை (எம்.எஸ்.) எண்.1229 உள் (போக்குவரத்து IV) துறை நாள்.2112.2006–ல் இரண்டாம் நிலை அலுவலர்களுக்கு NON/AC வாகனம் வாங்க மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ளதால், Mahindra BOLERO ZLX Power + BSIV AC PS 7STR ABS AB வாகனத்திற்குப் பதிலாக வேறு புதிய NON/AC வாகனம் வாங்க முன்மொழிவுகள் அனுப்பவும், மேலும் தற்போது நகராட்சி உபயோகத்தில் உள்ள TN 65 S 4101 ஈப்பு வாகனத்தின் பயன்பாட்டு விவரம் மற்றும் வாகனத்தின் RC புத்தகத்தின் நகல் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு நகராடசி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.களண்.32678/2019/தி2, நாள்.29.01.2020–ன்படி தெரிவிக்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கும், திருத்திய முன்மொழிவுகள் அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதிக்கும் முன் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.950/ 2017/இ1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு புதிதாக ஈப்பு வாகனம் வாங்குவதற்குரிய திருத்திய முன்மொழிவுகள் அனுப்புவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.740 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்: 10</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு மற்றும் மலேரியா காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைக்காக தீவிர கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளும் போது பயன்படுத்தப்படும் கொசுப்புழு ஒழிப்பு மருந்தான (Larvicide) டெமிபாஸ் (அபேட்) மருந்து – 200 லிட்டர் பொதுசுகாதார நலன் கருதி வாங்கி வழங்கிடுமாறும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ 1,30,000/– ஆகும் எனவும் இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நகர் மக்களின் பொதுசுகாதார நலனை கருத்தில் கொண்டு இச்செலவீனத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மேற்காணும் கொசு ஒழிப்பு மருந்துகளை அரசுதுறை நிறுவனமான தமிழ்நாடு மெடிக்கல் சர்வீஸ் கார்ப்பரேசன் லிமிடெட் சென்னை கடிதம் RefNo:015/M(P)/INSECT-LARVI(II)/ TNMSC/2017 Date : 14/11/2018-ன் படி அனுமதி பெற்றுள்ள M/S Paramount Pesticides Limited நிறுவனத்தில் வாங்குவதற்கு அனுமதி கோரியுள்ள இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரின் குறிப்பு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(கோப்பு எண் 121/2019/எச்1)**

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. உத்தேச செலவீனம் ரூ 1,30,000/– ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

2. நிர்வாக நலன் மற்றும் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் கொசு ஒழிப்பு மருந்துகள் வாங்க மன்றம் அனுமதிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.741 அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>பொருள்: 11</u>**

கீழக்கரை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் துப்புரவு பணிகளின் போது பயன்படுத்தப்படும் கிருமி நாசினி பொருட்களான **சுண்ணாம்புத்தூள் 2020—21 ஆம்** ஆண்டிற்கு வாஙகி வழஙகிடும் பொருட்டு துப்புரவு ஆய்வாளரால் தேவைப்பட்டியல் வழஙகப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகர் மக்களின் பொதுசுகாதார நலனை கருதியும் துப்புரவு பணியின் அவசியம் கருதியும் கீழ்கண்ட பொதுசுகாதார கிருமி நாசினி பொருட்கள் வாஙகுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டு அதற்கான உத்தேச செலவீனம் ரூ 1,25,000/—யை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கு துப்புரவு ஆய்வாளரால் கோரப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**(ந.க.எண் எச்1/291/2018)**

| | | | |
|---|---|---|---|
| நீர்த்த சுண்ணாம்புத்தூள் | — | 10 | டன் |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1. உத்தேச செலவீனம் ரூ 1,25,000/— ஐ வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
2. பொதுசுகாதார நலன் கருதி கிரிமிநாசினி பொருட்கள் அரசு கூட்டுறவு நிறுவனம் மூலம் பொருட்கள் வாஙகுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.742 அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள்: 12</u>

**தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் (TURIP)** 2020–21ன் கீழ் கீழக்கரை நகராட்சிப் பகுதிகளில் சாலைப்பணிகள் மேற்கொள்ள சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரால் நிதி ஒதுக்கீடு செய்யப்படவுள்ளதால், அதற்குரிய திட்ட கருத்துருவினை 10.06.2020–ந் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு, மதுரை, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக 28.05.2020–ம் தேதிய செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்காணும் செய்தியின் அடிப்படையில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தார்ச்சாலைகள் மற்றும் பேவர்கல் சாலைகள் அமைக்கும் பொருட்டு கீழ்கண்டவாறு சாலைப் பணிகள் தேர்வு செய்து பொறியாளர்களால் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கி.மீ) | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 3 பட்டாணியப்பா தர்ஹா சாலை, வார்டு எண்.20 ரஹ்மானியா நகர் பகுதியில் **தார்ச்சாலை அமைக்கும் பணி** மற்றும் இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 அன்புநகர் பகுதி 5, 7–வது குறுக்கு சந்து, வார்டு எண்.3 புதுகிழக்கு தெரு கிழக்குப் பகுதி, பட்டாணியப்பா தர்ஹா பகுதி 2, 3, 4–வது குறுக்கு சந்து, வார்டு எண்.10 சேரான் தெரு மற்றும் வார்டு எண்.11 ஜின்னா தெருவில் **பேவர்கல் சாலை அமைக்கும்** பணி. | **3.050** | **175.00** |

மேற்காணும் விபரப்படி **ரூ.175** லட்சத்திற்கு சாலைப்பணிகள் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு கோரும் பொருட்டு, சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**(கோப்பு எண். 245 /2020/இ1)**

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டினை மன்றம் அனுமதிக்கலாம்
2. இந்நகராட்சி நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு மதிப்பீடு ரூ. 175 இலட்சத்தினை அரசு முழுமானியத்துடன் அனுமதிக்கும் பொருட்டு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.
3. இந்நகராட்சி மூலம் செலுத்த வேண்டிய பங்குத் தொகை ஏதும் இருப்பின் வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.743 அனுமதிக்கப்பட்டது.</u>**

**ஒம்/– ஆ. தனலெட்சுமி,பி.காம்**
**தனி அலுவலர் / ஆணையாளர்(பொ)**
**கீழக்கரை நகராட்சி.**

**/ உண்மை நகல் /**

**ஆணையாளர் (பொ)**
**கீழக்கரை நகராட்சி.**